பிசாசுகளைத் துரத்துதல்

டெரிக் பிரின்ஸ்

Derek Prince Ministries - India

"PISASUKALAI THURATHUTHAL"

TA/3000/0914/LOP
ISBN 978-93-82910-97-8

"EXPELLING DEMONS" (Tamil)
"PISASUKALAI THURATHUTHAL"

Published by permission in the TAMIL language.

For orders & other enquiries please contact :
DEREK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM IMPEX
1C, EVR Road, Puthur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201/203/205

Derek
Prince
MINISTRIES INDIA
www.derekprince.in

பிசாசுகளைத் துரத்துதல்

''விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;'' *(மாற்கு 16:17)*

கிறிஸ்தவ விசுவாசிகளின் சாட்சியை உறுதிப்படுத்தும் வண்ணமாக உள்ள இயற்கைக்கு அப்பாற்பட்ட இருவரங்களைப் பற்றி இணைத்து இங்கு கிறிஸ்து கூறுகின்றார். இதில் முதலாவது பிசாசுகளைத் துரத்துதல்; இரண்டாவது நவமான மொழியினைப் பேசுவது. இன்று திருச்சபையில் பொதுவாக (பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றதின் அடையாளமான) நவமான மொழியினைப் பேசுவதையே அதிகம் கேட்கிறோம். ஆனால் அந்த அளவிற்கு பிசாசுகளைத் துரத்துவது பற்றி கேள்விப்படுவதில்லை. இந்த இரண்டு வரங்களும் இவ்வாறு பிரிந்து கிடப்பது ஏன்?

பார்க்கப்போனால் பிசாசுகளைத் துரத்துவதை, கிறிஸ்து நவமான மொழியில் பேசுவதற்கு *முன்* வைத்துக் கூறுகிறார். இந்த வரிசைப்படுத்துதலுக்கு முக்கியத்துவம் உள்ளது. இதன் நோக்கம் என்னவெனில், மக்கள் பரிசுத்த ஆவியின்

ஞானஸ்நானத்தைப் பெறுவதற்கு முன்னும், நவமான மொழியினைப் பேசுவதற்கு முன்னும் பிசாசின் பிடியிலிருந்து *முதலாவது* விடுதலையைப் பெறவேண்டும். இதைச் சரியாகப் பகுத்தறிந்து புரிந்து கொள்ளாததினாலே இன்று திருச்சபையில் இது அறியப்படாததாக உள்ளது. இதன் பலன் என்னவெனில், இந்நாட்களில் மக்கள் நவமான மொழியில் பேசும்படி ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள்; என்றாலும் அதற்குப் பின்பு பிசாசின் பிடியிலிருந்து விடுதலை அவர்களுக்குத் தேவைப்படுகிறது. பிசாசுகளைப்பற்றி அறிந்து கொள்வதற்கு திருச்சபையானது திறந்த மனதுடனும் ஜெபத்துடனும் முன் வரவேண்டும்.

புதிய ஏற்பாட்டில் "பிசாசு" என்பதற்கான கிரேக்கச் சொல் *'டேய்மானியான்'* (daimonian) என்பதாகும். இது 'டேய்மான்' (daimon) என்ற சொல்லின் விரிவாக்கம். கிரேக்க புராணக் கதைகளிலும் நாடோடி இலக்கியத்திலும் இந்த வார்த்தை இயற்கைக்கு அப்பாற்பட்ட தனி இனத்தைக் குறிப்பதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வகையான பிசாசுகளை அடிப்படையாகக் கொண்டு, பலவித போலி மதங்களும் குருட்டு நம்பிக்கைகளும் தோன்றி சாதாரண மக்களின் தின வாழ்வை பெரும்பாலும் பாதித்து வருகிறது.

கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் *டேய்மானியான்* என்ற

சொல் பல தடவைகள் பிசாசு என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. டெவில் (devil) என்ற சொல் 'டயபோலாஸ்' என்ற சொல்லிலிருந்து வருகிறது. இதற்குக் ''குறை கூறுபவன்'' என்று பொருள். வேதத்தில் இப்பட்டம் பொதுவாக சாத்தானைக் குறிப்பதாக உள்ளது.

புதிய ஏற்பாட்டில் 'டேய்மானியான்' என்ற சொல் 'டேய்மானிசோமாய்' என்ற வினைச்சொல்லாக வருகிறது. இதனுடைய உண்மையான அர்த்தம் வாழ்வின் ஏதாவது ஒரு பகுதியில் ''பிசாசின் ஆதிக்கத்திற்குள்'' அல்லது ''கட்டுப்பாட்டிற்குள்'' வருவது என்பதாகும். இந்த வினைச் சொல்லின் அர்த்தம் பொதுவானது. கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் இந்த வினைச் சொல் "பிசாசு பிடித்தல்" அல்லது "தீய ஆவியால் தாக்கப்படுதல்'' என்று கூறப்படுகிறது. ஆங்கிலத்தில் பலவிதமான சொற்கள் வரினும் கிரேக்கத்தில் இவையனைத்தும் எந்த மாற்றமுமில்லாமல் ஒன்றையே குறிக்கிறது. சில பிரசங்கிமார் பிசாசு பிடித்தல், பிசாசின் தாக்குதல், பிசாசால் ஆட்டிப் படைக்கப்படுதல் போன்ற வார்த்தைகளுக்கு நீண்ட விளக்கமளிக்கின்றனர். இப்படிப்பட்ட வித்தியாசங்களைக் குறித்து மூல கிரேக்கத்தில் நாம் காண்பதில்லை.

புதிய ஏற்பாட்டில் வழக்கமாகப் பயன்படுத்தப்படும் இருபதங்கள் "அசுத்த ஆவி," "தீய ஆவி" என்பதாகும்.

வெளிப்படுத்தின விசேஷம் 16ம் அதிகாரம் 13 முதல் 16 வசனங்களில் பார்க்கும் பொழுது “பிசாசுகள்” என்ற சொல்லும் “அசுத்த ஆவிகள்” என்னும் சொல்லும் ஏறக்குறைய ஒரே அர்த்தத்தில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு ‘‘தனி மனிதனின்’’ நிலையை விளக்க மனோதத்துவம் மூன்று முக்கிய காரியங்களைக் குறிப்பிடுகிறது. அவைகள்: அறிவு, சித்தம், உணர்ச்சி. மனிதத்துவத்தின் இந்த மூன்று கூறுகளும் புதிய ஏற்பாட்டில் பிசாசுகளுக்கு இருப்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது.

பிசாசுகளுக்கு அறிவு உண்டு. மாற்கு 1:24ல் கப்பர்நகூம் ஆலயத்திலிருந்த அந்த மனிதனில் உள்ள பிசாசு கிறிஸ்துவிடம் ‘‘உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்” என்று கூறியது. அப். 19:15ல் எபேசுவில் உள்ள மனிதனிலிருந்த பிசாசு ஸ்கேவாவின் ஏழு புத்திரரை நோக்கி ‘‘இயேசுவை நானறிவேன் (புரிந்திருக்கிறேன்), பவுலையும் அறிவேன் (அவனைப்பற்றியும் தெரியும்) நீங்கள் யார் ?” எனக் கேட்டது.

பிசாசிற்கு சித்தமுண்டு. மத்தேயு 12:44ல் ஒரு மனிதனிலிருந்து வெளியேறிய ஒரு பொல்லாத ஆவி இளைப்பாற இடம் காணாமல் “நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன்” என்று சொல்லியதைக் காண்கிறோம். லூக்கா 8:31-33ல் கதரேனருடைய

நாட்டு மனிதனிலிருந்த பிசாசு பாதாளத்திற்குப் போக விரும்பாமல் பன்றிகளுக்குள்ளே செல்ல உறுதியாய் உத்தரவு கேட்பதைக் காண்கிறோம்.

பிசாசுகளுக்கு உணர்வு உண்டு. யாக்கோபு **2:19**ல் "பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன" என வாசிக்கிறோம்.

பிசாசுகளின் ஆள்த்தத்துவத்தை நிறுவும் மற்றொரு குறிப்பு - அவைகளுக்குள்ள பேசும் திறன். இது புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் வருகிறது. மனோதத்துவத்தின் அடிப்படையில், ஆள்த்தத்துவத்தின் முக்கியக் கூறு 'அர்த்தமுள்ள பேச்சில் தன்னை வெளிப்படுத்துதல்' என்பதாக உள்ளது.

எல்லாவிதத்தில் பார்க்கும் பொழுதும் பிசாசுகள் தன் ஆள்த்தத்துவத்தை வெளிப்படுத்துகிறது. இது மிகவும் முக்கியமானது. பிசாசுகள் உயிரற்ற பொருள்கள் அல்ல, அவைகள் ஆள்த்தத்துவமுள்ள நபர்கள் என்பதை ஒரு கிறிஸ்தவன் புரிந்து கொள்ளும்பொழுதுதான் அவைகளுடன் எதிர்த்து நிற்க முடியும். பிசாசு என்பது ஒரு மனோ நிலையோ, பழக்கமோ அல்லது மூளைக் கோளாறோ அல்ல; பிசாசு ஆள்த்தத்துவம் கொண்ட ஒரு நபர்.

இயற்கைக்கு அப்பாற்பட்ட பரிசுத்த ஆவியின் செயல்பாட்டினால் பிசாசுகள் இருப்பதையும் அதன் செயற்பாட்டையும் கண்டு கொள்ள உதவும் வரம்

"ஆவிகளைப் பகுத்தறிதலாகும்." **(1 கொரி. 12:10)** பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற கிறிஸ்தவர்கள் ஓரளவிற்கு இந்த ஆவிக்குரிய பகுத்தறிவைப் பயன்படுத்துகின்றனர். பெரும்பாலான வேளைகளில் ஆவியானவரின் செயல்பாட்டை அறியாததினால் இந்த வரத்தைத் திறமையுடன் பயன்படுத்த முடிவதில்லை. தொடர்ந்து பயிற்சி செய்வதின் மூலம் இவ்வரத்தின் ஆற்றலைப் பெருக்கிக் கொள்ளலாம். இதன் காரணமாகவே எபிரெயர் **5:14**ல் விசுவாசிகளைப் பற்றி "நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்" என்று கூறப்பட்டுள்ளது.

கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய புலன்களைப் பயன்படுத்தும் பொழுது, பிசாசு இருப்பதனை வெளிப்படுத்தும் பலவித அறிகுறிகளையும் அதன் செயற்பாட்டின் வகைகளையும் சீக்கிரத்தில் புரிந்து கொள்வார்கள். இவைகளுள் முக்கியமான வெளிப்பாடுகள் இரண்டாகும். முதலாவதாக உள்ளான, மனதின் சுபாவத்திற்கடுத்ததாக அது இருக்கும், இரண்டாவதாக வெளிப்படையாக சரீரத்தில் அது வெளிப்படும்.

1. மனோரீதியான அறிகுறி

(a) தன் சொந்த சித்தத்திற்கும் சுபாவத்திற்கும் மாறாக, தொடர்ந்து காணப்படும் அல்லது அடிக்கடி

உண்டாகும் தீய உணர்ச்சிகள், நோக்கங்கள் ஆகும். இது அம்மனிதனை அடிமைப்படுத்தி வைத்திருக்கும். உதாரணமாக: கோபம், விரோதம், பயம், பொறாமை, பெருமை, சுயபரிதாபம், அழுத்தம், பொறுமையின்மை, வெறுப்பு போன்றவை.

(b) “மனநிலை” (Moods) - காரணமற்ற நிலையில் திடீரென்று தோன்றி மறையும் மனநிலை: உதாரணமாக பரவசத்துடன் பேசிக் கொண்டிருப்பதிலிருந்து விடுபட்டு திடீரென அமைதியாக மனச்சோர்வில் ஆழ்ந்துவிடுதல்.

(c) பலவிதமான மதத்திற்கடுத்த பிழைகள் அல்லது கட்டுகள்: உதாரணமாக: வேதத்திற்கு முரணான கொள்கைகளுக்கு ஒப்புக்கொடுத்தல் அல்லது தடைசெய்தல், அசாதாரண துறவியின் பாங்கு, சாதாரண உணவைச் சாப்பிட மறுத்தல், பல வகையான சிலை வணக்கம், மூட நம்பிக்கையான காரியங்களைக் கடைப்பிடித்தல்.

(d) வசீகரம், குறிசொல்லுதல், சோதிடம், செத்த ஆவிகளுடன் பேசுதல்.

(e) அடிமைப்படுத்தும் பழக்கங்கள்: பெருந்தீனி, மது, நிக்கோடின், மருட்சியூட்டும் மருந்து சாப்பிடுதல், பாலுறவுக்கடுத்த பாவங்கள் அல்லது கட்டுக்கடங்காத அசுத்தமான எண்ணங்கள் அல்லது பார்வைகள்.

(f) தேவ தூஷணம், அநாகரிகமான பேச்சு, கேலிசெய்தல்.

(g) வசனத்தின் சத்தியத்திற்கு அல்லது ஆவியானவருக்கு எதிர்த்து நிற்பது.

2. சரீரப்பிரகாரமான அறிகுறி

(a) ஒய்வற்ற நிலை, தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பது, முணுமுணுத்தல்

(b) கண்கள் அதிகமாய் வெளியில் துருத்திக்கொண்டு காணப்படுவது, நேராகப் பார்க்க முடியாத நிலை.

(c) வாயில் நுரை தள்ளுதல், வாயில் துர்நாற்றம்

(d) இதயத்துடிப்பு அதிகரித்தல் அல்லது இதயம் வேகமாகச் செயல்படுதல்

(e) உடலை நெரித்துக்கொள்தல், சுருண்டு கொண்டு இருப்பது, அல்லது பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் போராடுதல்

அநேகம் தடவைகளில் இவைகளில் ஓர் அறிகுறி இருப்பதை வைத்துக் கொண்டு பிசாசு உள்ளது அல்லது செயற்படுகிறது எனக் கூறிவிடமுடியாது. மேற்கூறியவற்றுள் பல அறிகுறிகள் காணப்படுமாயின் பிசாசு இருப்பதின் சாத்தியக் கூறு அதிகமாகும்.

இந்த அறிகுறிகள் தவிர புதிய ஏற்பாட்டில் சரீர சுகவீனம், பெலவீனங்கள் ஆகிய இரண்டும்

பெரும்பாலும் பிசாசினால் வருபவை என குறிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக லூக்கா 13:11ல் நாம் "பதினெட்டு வருஷமாய்ப் *பலவீனப்படுத்தும் ஆவியைக்* கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள்." என வாசிக்கிறோம். இந்த பெலவீனத்தின் ஆவியிலிருந்து விடுபட்டதும், அவளுடைய சரீர நிலை ஆரோக்கியமடைந்தது. இயேசுவே அவளை "ஆபிரகாமின் குமாரத்தி" என அழைக்கிறார். அவள் உண்மையான விசுவாசி என்பது அதன் அர்த்தம். அவளிடம் குறிப்பிட்ட பாவம் இருந்தது என்பதற்கான குறிப்பு இல்லை. பிசாசின் ஆற்றல் அவள் சரீரத்தில் வெளிப்பட்டது.

மீண்டும் அப். 19:12ல் எபேசுவில் பவுல் செய்த ஊழியம் பற்றி காண்கிறோம். "அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டு வந்து, வியாதியஸ்தர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களைவிட்டுப் புறப்பட்டன." இங்கு "பொல்லாத ஆவிகளும்" "வியாதிகளும்" ஏதோ ஒரு வகையில் ஒன்றோடொன்று உறவு கொண்டதாக இருப்பதைக் காண்கிறோம்.

கீழே கொடுக்கப்பட்டவை மனோ ரீதியிலோ அல்லது சரீரப் பிரகாரமாகவோ பிசாசினால் உண்டாகும் நிலைமைகள்: **பைத்தியம், தூக்கமின்மை,** வலிப்பு,

ஒற்றைத் தலைவலி, தசைகள் உணர்ச்சியற்றுப்போவது, சைனஸ், தொற்றுநோய், கட்டிகள், அல்சர்கள், இதய நோய், மூட்டுவலி, திமிர்வாதம், செவிட்டுத்தன்மை, ஊமையாயிருப்பது, குருட்டுத்தன்மை போன்றவை.

இவ்வாறு பிசாசின் அழிக்கும் ஆற்றலிலிருந்து அல்லது அதன் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவது எவ்வாறு?

முதல் நிபந்தனை: *காரணத்தைச் சரியாகக் கண்டுபிடிப்பது.* பவுல் தன் ஊழியத்தைப் பற்றி விளக்கும் போது 1 கொரிந்தியர் 9:26ல் "ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன்" என்கிறார். கிறிஸ்தவர்கள் பிசாசுகளினால் தாக்கப்படும் பொழுது அவர்கள் தங்கள் எதிரியின் சுபாவம் பற்றி சரியாக உணர்ந்தவர்களாயிருப்பதில்லை. ஒரு குத்துச் சண்டை வீரன் தன் குத்துகளை எதிரியின் உடலை நோக்கிச் செலுத்தாது, விண்ணில் செலுத்துவதைப் போல் அவர்கள் உள்ளனர். அவர்கள் அதிக நேரமும் சக்தியும் செலவிட்ட பொழுதிலும், தங்களை எதிர்க்கும் காணப்படாத விரோதிகளை இனம் கண்டு தாக்குவதில்லை. இதன் காரணமாக அவர்கள் பெரிதாக எதையும் சாதிப்பதில்லை. பிசாசு இருப்பதையும் அதன் செயல்பாட்டினையும் சரியாகக் கணித்ததற்குப்பின், விடுதலை பெறுவதற்குப் பல நிபந்தனைகள் உள்ளன. இந்த நிபந்தனைகளுள் சில விடுதலையின் ஊழியம் செய்பவருக்கும், மற்றவை

விடுதலை பெற விரும்புபவருக்கும் உரியது.

எளிதாய் இருப்பதற்காக விடுதலை ஊழியத்தைச் செய்ய முற்படுபவரை "ஊழியக்காரர்" என அழைப்போம். அவர் கைக்கொள்ள வேண்டிய ஐந்து நிபந்தனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(1) அந்த ஊழியக்காரர் இயேசுவின் நாமத்தில் தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தை உணரவேண்டும். இயேசு தாமே ''*என் நாமத்தினாலே* பிசாசுகளைத் துரத்துவார்கள்'' என்று கூறியுள்ளார். லூக்கா 10:17ல் "அந்த எழுபது பேரும் சந்தோஷத்தோடே திரும்பிவந்து: ஆண்டவரே, *உம்முடைய நாமத்தினாலே* பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்றார்கள்.'' என்று வாசிக்கிறோம். அப்போஸ்தலர் 16:18ல் பிலிப்பு பட்டணத்தில் குறி சொல்லும் ஆவியை உடைய பெண்ணிடம் பவுல் பேசிய பொழுது "நீ இவளை விட்டுப் புறப்படும்படி *இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே* உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று."

(2) அந்த ஊழியக்காரருக்கு பரிசுத்த ஆவியின் வல்லமை தேவை. மத்தேயு 12:28ல் இயேசு "நான் *தேவனுடைய ஆவியினாலே* பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம்

உங்களிடத்தில் வந்திருக்கிறதே'' என்று கூறுகிறார். இங்கு பிசாசுகளைத் துரத்துவதற்கு ஆவியானவரின் வல்லமை தேவை என்பதை அறிகிறோம். அதைப்போலவே லூக்கா 4:18ல் பரிசுத்த ஆவியின் வல்லமையாலே "சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும் . . . நொறுங்குண்டவர்களுக்கு விடுதலையையும்'' அறிவிக்கிறார்.

(3) இந்த ஊழியர் அவரவருக்கு ஏற்றபடி வேதபகுதியிலிருந்து பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான நிபந்தனையையும், இயேசுவின் இரத்தத்தின் மூலம் மீட்பு எவ்வாறு கிடைக்கிறது என்பதனையும் எடுத்துக்கூற வேண்டும்.

(4) தனிப்பட்ட முறையில் ஆலோசனை வழங்க நேரத்தையும் இடத்தையும் தேர்ந்தெடுக்க வேண்டும். பொதுவான ஆராதனை நடக்கின்ற வேளையில் இந்த ஊழியத்தை ஆரம்பிக்க நேரம் எடுத்துக் கொள்வது சரியல்ல.

(5) இந்த ஊழியர் எந்த விதத்திலும் ஆவிக்குரிய பெருமை கொள்ளக்கூடாது. விடுதலை தேவைப்படுவோரை கரிசனையுடன் அணுகி தெய்வீக மனதுருக்கம் கொண்டு செயல்பட வேண்டும். திருச்சபையில் இப்படிப்பட்ட

விடுதலை தேவைப்படுவோர் முதலாவதாக கவனிக்கப்படவேண்டும்.

இனிமேல் விடுதலை தேவைப்படுவோருக்கான நிபந்தனைகளைக் காண்போம். அவரை ''உதவி தேவைப்படுவோர்'' என அழைப்போம். அந்த நிபந்தனைகள் கீழே தரப்பட்டுள்ளன:

(1) **தாழ்மை.** பிசாசை எதிர்த்து நிற்பதற்கு முன்பு தன்னை தேவனுக்கு ஒப்புக் கொடுக்கின்ற தாழ்மை தேவை. (யாக்கோபு 4:6-7 பார்க்கவும்)

(2) **நேர்மை.** இந்த நிலைக்குக் காரணமான பாவத்தை அறிக்கையிடத் தயங்கக்கூடாது. தன் மோசமான நிலையை மறைக்காமல் அதை நேர்மையுடன் ஒப்புக்கொண்டு தெரிவிக்க வேண்டும். (சங்கீதம் 32:1-5 பார்க்கவும்.)

(3) **அறிக்கையிடுதல்.** விடுதலையின் உதவி தேவைப்படுவோர் தான் அறிந்து செய்து வரும் பாவங்களை அறிக்கையிடல் வேண்டும். (1 யோவான் 1:9) இதற்கும் மேலாக விடுதலைபெற ஜெபத்தில் உதவும் ஊழியரிடமும் இதனைத் தெரிவிப்பது நலம். இது யாக்கோபு 5:16ல் "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை *ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்.* நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும்

பெலனுள்ளதாயிருக்கிறது.'' என குறிக்கப்பட்டுள்ளது. அறிக்கையிடுதலை தேவனிடம் மட்டுமன்றி மனிதரிடமும் செய்ய வேண்டும். முதலாவது ''அறிக்கையிடல்''- இரண்டாவதுதான் "ஜெபித்தல்".

(4) **விட்டுவிடுதல்.** அறிக்கையிட்டால் மட்டும் போதாது. அறிக்கையிட்ட பாவத்தை *விட்டு விடல்* வேண்டும். "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து *விட்டுவிடுகிறவனோ* இரக்கம் பெறுவான்." (நீதி. 28:13). "துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்." (ஏசாயா 55:7). பாவி ''தன் வழிகளை'' (வெளிப்படையான கிரியைகளை) ''விட்டு விடுவது'' மட்டுமன்று பாவத்திற்கடுத்த ''தன் எண்ணங்களையும்'' விட்டு விடல் வேண்டும் (மனாீதியில் பாவத்தின்மேல் நாட்டம் கொள்தல் அல்லது ஆசை வைத்தல், கிரியைகளில் வெளிப்படாவிட்டாலும் அது கேட்டினையே விளைவிக்கும்). "மன்னிப்பையும் இரக்கத்தையும்" பெறுவதற்கு முன்பாகத் தவறான வழிகளை "விட்டுவிடுதல்" அவசியம்.

(5) ***மன்னிப்பு.*** தேவனிடத்தில் மன்னிப்பை விரும்புபவன், பிறரை முதலாவதாக மன்னிக்க வேண்டும். மனக்கசப்பும் மன்னியாமல் இருக்கும் தன்மையும் விடுதலைக்கு இடையூறாக இருக்கும் இரு காரணங்கள். எபி. **12:15**ல் ''கசப்பான வேர் முளைத்தெழும்பக் கூடாதபடி'' தடுக்க வேண்டுமெனப் பார்க்கிறோம். இதயத்தை எந்த கசப்பு நச்சுப் படுத்தியதோ அதனுடைய வேர்கூட இராதபடி அதனை நீக்க வேண்டும்.

கர்த்தர் கற்றுக் கொடுத்த ஜெபத்தில் இதன் முக்கியத்துவம் சிறப்பாக வலியுறுத்தப்பட்டுள்ளது. "நாங்கள் பிறர் குற்றங்களை *மன்னிப்பது* போல எங்கள் குற்றங்களை எங்களுக்கு *மன்னியும்*". (இதற்கு அர்த்தம் என்னவென்றால் நாம் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய மன்னிப்பின் அளவு நாம் பிறரை மன்னிப்பதின் அளவைப் பொறுத்தது என்பதாகும்.) அதற்குப் பின்பே "தீமையினின்று எங்களைக் காத்தருளும்" என்று வருகிறது. ஆகவே *விடுதலைக்கு* முன்பு *மன்னிப்பு* வரவேண்டும். மன்னிக்காத நிலையில் விடுதலையடைய நமக்கு உரிமையில்லை.

(6) மேற்கூறிய ஐந்து நிபந்தனைகளையும் விடுதலை பெற விரும்புபவர் கடைப்பிடித்த பின்பு, அவர் யோவேல் **2:32**ல் ''கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன்

இரட்சிக்கப்படுவான்; கர்த்தர் சொன்னபடி, சீயோன் பர்வதத்திலும் எருசலேமிலும், கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப்பவர்களிடத்திலும் இரட்சிப்பு உண்டாயிருக்கும்'' என்ற வாக்குத்தத்தத்தை உரிமையாக்க தகுதியுள்ளவராகிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை உரக்கக் கூறி அழைப்பதின் மூலம் விடுதலை ஆரம்பமாகும்.

பிசாசினின்று விடுதலை பெறுவது என்பது பொதுவாக சற்று காலம் எடுத்துக் கொள்ளும் ஒரு *காரியம்.* இது குறுகிய காலத்தில் நடைபெறலாம் அல்லது சற்று அதிக காலமெடுத்துக் கொள்ளலாம். அது அமைதியாகவும் நடைபெறலாம் அல்லது அமோகமாகவும் நடைபெறலாம். ஆனால் எப்பொழுது ஒருவன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை அடைகிறானோ, அப்பொழுது அது அவனில் ஒரு தெளிவான மாற்றத்தை உண்டாக்கும். எந்த மாற்றமுமே காணப்பட வில்லையாயின் விடுதலை கிடைத்ததா என்பதில் சந்தேகம்தான்.

இது ஒரு பொது அறிவான காரியம். ஒரு நபருக்குள் எங்காவது பிசாசு இருக்குமாயின், அது கட்டாயம் வெளிவந்தாக வேண்டும். அது வெளியே வரும்வரை விடுதலை கிட்டாது. பொதுவாக பிசாசு மறைந்தே கிடக்க விரும்புமேயன்றி வெளிப்படையாக வெளியேறிவருவதற்குத் தயங்கும்.

பிசாசு என்பது ஓர் “ஆவி”. “ஆவி” என்பதற்கு கிரேக்கச்சொல் நியூமா (pneuma). இதற்கு “சுவாசக்காற்று” என்றும் அர்த்தமுண்டு. ஒருவனுடைய சுவாசக் காற்று மூக்கு அல்லது வாய் வழியாகத்தான் வெளியேறும். பொல்லாத ஆவியைப் பொறுத்த மட்டிலும் இது உண்மையே. ஒரு பிசாசு ஒரு நபரை விட்டு வெளியேறும் பொழுது, அது பொதுவாக அவன் வாய் வழியாகத்தான் வெளியேறும். இந்த வேளை வெளிப்படையாக அது தெரிவிக்கப்படும். விடுதலையை அறிவிக்கக் கூடிய சம்பவங்கள் பின்வருமாறு: உஸ் என்ற சத்தம், இருமல், தேம்பியழுதல், அலறுதல், கெர்ஜித்தல், ஏப்பம் விடுதல், துப்புதல், வாயாலெடுத்தல், எரிச்சலடைதல் போன்றவை.

பிசாசு சத்தமிட்டு வெளியேறுவதை அல்லது கர்ஜனை செய்து வெளியேறுவதை அப். 8:7 மூலம் அறியலாம். “அநேகரிலிருந்த அசுத்தஆவிகள் *மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு* அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள்.” பலதரப்பட்ட வெளியேற்றங்களுள் நான் கூறியவை இரு வகையாகும். தரத்தில் வித்தியாசமான பிசாசுகள் அதற்கேற்ற விதமான நடத்தையுடன் வெளியேறும். உதாரணமாக பாலுறவிற்கடுத்த அசுத்த ஆவி பொதுவாக துப்பிக் கொண்டும் வாயாலெடுத்துக்கொண்டும் வெளியேறும். (அதிக

அளவிலான சளி போன்ற பொருளை வாந்தி பண்ணி அது வெளியேறும்) பயமென்னும் பிசாசு பொதுவாகத் தேம்பி அழுது கொண்டு அல்லது முணுமுணுத்துக் கொண்டு வெளியேறும். பொய்யின் ஆவி அல்லது விரோதத்தின் ஆவி உரத்த சத்தமிட்டு வெளியேறும். நிக்கோடினை பயன்படுத்தச் செய்யும் பிசாசு (புகைபிடிக்கச் செய்யும் ஆவி) இருமலுடன் அல்லது மூச்சுத் திணறலுடன் வெளியேறும்.

சில வேளைகளில் பிசாசு தான் வசிக்கும் மனிதனின் சுபாவத்தை வெளிப்படுத்தாது, தன் சொந்த சுபாவத்தைக் காட்டி வெளியேறும். சில வேளைகளில் விடுதலை பெற விரும்புபவரின் பேசுகின்ற ஆற்றலைப் பயன்படுத்தித் தன் சொந்த வார்த்தைகளைக் கூறி வெளியேறும். இவ்வேளை குரலிலேயே மாற்றம் காணப்படும். ஒரு பெண்ணின் தொண்டையிலிருந்து கடூரமான ஆணின் குரலில் வெளிப்படலாம். அந்த நபர் கற்றிராத மொழியைக் கொண்டு அவன் மூலமாக சில வேளைகளில் பிசாசுகள் பேசக்கூடும். இவ்வேளைகளில் ஊழியக்காரர் தனக்குள்ள இயேசுவின் நாமத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு பிசாசையும் அதனுடைய பெயரை அறிவித்து விட்டு வெளியேறும்படிக் கட்டளையிடவேண்டும். அதன்மூலம் அதன் சுபாவத்தையும் செயல்பாட்டையும் அறியலாம். கீழ்க்கண்ட பெயர்களைக் கூறி பிசாசுகள்

வெளியேறுவதை நான் கண்டிருக்கிறேன்: ***பயம், விரோதம், பொய், சந்தேகம், பொறாமை, குழப்பம், முறைகேடு எரிச்சல், கிசோபிரினியா, மரணம், தற்கொலை, விபசாரம், கேலி செய்தல், தூஷணம், பில்லி சூனியம்.*** இன்னும் பல பெயர்களுமுண்டு. அவை அச்சேற்றம் செய்யத் தகாதவை.

இன்று தெய்வாதீனமாக நடைமுறை மரபு, மாம்சீகம் போன்றவற்றின் திரை விலக்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் இயேசுவின் நாட்களில் திருச்சபையில் காணப்பட்ட பிசாசின் வல்லமை இன்றும் காணப்படுகிறது. இச் சூழலில், திருச்சபையானது அக்காலத்தில் கையாண்ட ஆற்றலையும் அதிகாரத்தையும் ஆவியானவரின் அபிஷேகத்தையும், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தையும் இரத்தத்தின் வல்லமையையும் பயன்படுத்த வேண்டும்.

பிசாசுகளைத் துரத்துதல் பற்றி அதிகம் அறிய விரும்பினால் பின் வரும் ஆடியோ/ வீடியோ கேசட்களை வாங்கிப் பயன் பெறலாம். ஆனால் செய்திகள் ஆங்கிலத்தில் உள்ளன.

தேவனுடைய பாதுகாப்பிலுள்ள நம்பிக்கையை அறிக்கையிடுதல்

எனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும். எனக்கு

விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நான் குற்றப்படுத்துகிறேன். இது கர்த்தருடைய ஊழியக்காரனாகிய என்னுடைய சுதந்திரம். சேனைகளின் கர்த்தராகிய உம்மிடமிருந்து என் நீதி வருகிறது.

எனக்கு விரோதமாகப் பேசுபவர்களையும், எனக்கு விரோதமாக ஜெபிக்கின்றவர்களையும், எனக்கு தீமையும் கேடும் உண்டாக வேண்டும் என விரும்புபவர்களையும், என்னை ஒதுக்கித் தள்ளியவர்களையும் நான் மன்னிக்கிறேன். [1]அவர்களை மன்னித்து கர்த்தருடைய நாமத்திலே அவர்களை ஆசீர்வதிக்கிறேன்.

இப்பொழுதும் கர்த்தாவே நீர் மட்டுமே என் கர்த்தர் என்றும், என்னுடைய இரட்சகர் என்றும், உம்மைத் தவிர வேறே தேவர்கள் இல்லையென்றும் நான் அறிக்கையிடுகிறேன். நீர் நீதியுள்ள தேவன், இரட்சகர். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவராகிய உம்மை நான் ஆராதிக்கிறேன்.

---

[1]மத்தேயு 5:43-45; ரோமர் 12:14

நான் என்னைப் புதிதாக இந்த நாளில்/ இந்த இரவில் எந்தவித நிபந்தனையுமின்றி கீழ்ப்படிதலுக்கு ஒப்புக் கொடுக்கிறேன். உமக்கு ஒப்புக் கொடுத்ததின் அடிப்படையில் நான் உம்முடைய வார்த்தையின்படி செய்ய விரும்புகிறேன். நான் பிசாசையும் அவனுடைய நெருக்குதல்களையும், அவன் தாக்குதல்களையும், அவன் தரும் பிரச்சனைகளையும், அவன் தரும் ஏமாற்றங்களையும், அவன் எனக்கு விரோதமாகப் பயன்படுத்தும் ஒவ்வொரு ஆயுதத்தையும், நபரையும் எதிர்க்கிறேன். அதற்கு நான் என்னை ஒப்புக் கொடுக்க மறுக்கிறேன்! அவனுக்கு எதிர்த்து நிற்கிறேன். இயேசுவின் நாமத்தில் அவனை விரட்டி அவனை ஒதுக்கி வைக்கிறேன்.

சிறப்பாக நான் எதிர்த்து தள்ளிவைப்பது: பெலவீனம், வலி, தொற்று நோய், வீக்கம், வேண்டாத வளர்ச்சி, ஒவ்வாமை, நுண் கிருமிகள், எல்லாவிதமான பில்லி சூனியங்கள்.

இறுதியாக கர்த்தாவே, இயேசு கிறிஸ்துவின் சிலுவையின் தியாக மரணத்தினாலே நான் சாபத்திலிருந்து நீங்கி, நீர் சகலவிதத்திலும் ஆசீர்வதித்த ஆபிரகாமின் ஆசீர்வாதங்களுக்குள் கடந்து வருகிறேன். அவை உயர்வு, ஆரோக்கியம், கனிதரும் தன்மை, வளமை, வெற்றி, தேவ சலுகையாக உள்ளன.

ஆமென்.[2]

[2]கலாத்தியர் 3:13, 14; ஆதியாகமம் 24:1.

இரத்தம் மட்டுமே

இயேசுவின் இரத்தம் நமக்குச் செய்து முடித்தவற்றைப் பற்றி தேவனுடைய வார்த்தை என்ன சொல்கின்றதோ அதை நமது சொந்த சாட்சியாகச் சொல்லும்போது, நாம் சாத்தானை மேற்கொள்கிறோம்.[1]

இயேசுவின் இரத்தத்தின் மூலம் நான் பிசாசின் கையிலிருந்து மீட்கப்படுகிறேன்.[2]

இயேசுவின் இரத்தத்தின் மூலம் என்னுடைய எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்பட்டன.[3]

இயேசுவின் இரத்தத்தின் மூலம் என்னுடைய எல்லாப் பாவத்திலிருந்தும் தொடர்ந்து சுத்திகரிக்கப்படுகிறேன்.[4]

இயேசுவின் இரத்தத்தின் மூலம் தேவனுக்கு ஏற்றவனென்றும், நீதிமானாகவும், பாவம் செய்யாதவனைப் போலவும் கருதப்படுகிறேன்.[5]

இயேசுவின் இரத்தத்தின் மூலம் சுத்திகரிப்பைப் பெற்று பரிசுத்தமாக்கப்பட்டு தேவனுக்கென்று பிரத்தியேகப்படுத்தப்படுகிறேன்.[6]

இயேசுவின் இரத்தத்தின் மூலம் தேவ சமுகத்தில் பிரவேசிக்க தைரியத்தைப் பெறுகிறேன்.[7]

இயேசுவின் இரத்தம் என் சார்பில் பரலோகத்திலிருக்கும் தேவனை நோக்கித் தொடர்ந்து முறையிடுகிறது.[8]

---

[1]வெளி. 12:11 [2]எபேசியர் 1:7 [3]1 யோவான் 1:9
[4]1 யோவான் 1:7 [5]ரோமர் 5:9 [6]எபிரெயர் 13:12
[7]எபிரெயர் 10:19 [8]எபிரெயர் 12:24

மீட்கப்பட்டோர் இப்படிச் சொல்வார்களாக[1]

என்னுடைய சரீரம் மீட்கப்பட்டு[2], சுத்திகரிக்கப்பட்டு[3], இயேசுவின் இரத்தத்தினாலே பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறதினாலே[4], அது பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கிறது.[5]

என் சரீரத்தின் உடலுறுப்புகள், தேவனுடைய மகிமைக்கும் ஊழியத்திற்கும் ஒப்புக் கொடுக்கப்பட்ட நீதியின் அவயவங்களாயிருக்கிறது.[6]

என்னிடத்தில் பிசாசிற்கு எந்தப் பங்குமில்லை. என் மேல் அதிகாரம் செலுத்தவோ, கணக்கைத் தீர்த்துவை என்று சொல்லவோ பிசாசிற்கு உரிமையில்லை. அனைத்தும் இயேசுவின் இரத்தத்தினாலே செலுத்தித் தீர்க்கப்பட்டாயிற்று.[7]

ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலும் என் சாட்சியின் வசனத்தினாலும் நான் சாத்தானை மேற்கொண்டேன். மரணமே நேரிடுவதாயினும் அதிலிருந்து தப்பும்படி என் ஜீவனை பொருட்படுத்தமாட்டேன்.[8]

என் சரீரம் கர்த்தருடையது; கர்த்தர் என் சரீரத்திற்குரியவர்.[9]

---

[1] சங்கீதம் 107:2 [2] 1 கொரிந்தியர் 6:19
[3] எபேசியர் 1:7 [4] 1 யோவான் 1:7
[5] எபிரெயர் 13:12 [6] ரோமர் 6:13
[7] ரோமர் 3:2325, 8:3334 [8] வெளி. 12:11
[9] 1 கொரிந்தியர் 6:13

சிலுவையில் நிறைவேற்றப்பட்ட பரிமாற்றம்

நாம் மன்னிக்கப்படும்படி இயேசு தண்டிக்கப்பட்டார்.[1]

நாம் சுகம் பெறும்படி இயேசு காயப்பட்டார்.[2]

அவருடைய நீதியினால் நாம் நீதியாகும்படி இயேசு நமது பாவங்களினால் பாவமாக்கப்பட்டார்.[3]

நாம் அவருடைய வாழ்வை வாழும்படி அவர் நமது மரணத்தை ஏற்றார்.[4]

நாம் ஆசீர்வாதத்தைப் பெறும்படி இயேசு சாபமானார்.[5]

அவருடைய பரிபூரணத்தில் நாம் பங்குகொள்ளும்படி இயேசு நமது வறுமையை ஏற்றுக் கொண்டார்.[6]

நாம் அவருடைய மகிமையில் பங்கு கொள்ள இயேசு இகழப்பட்டார்.[7]

நமது புறக்கணிப்பை இயேசு அனுபவித்ததாலே நாம் பிதாவினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறோம்.[8]

மரணத்தால் இயேசு தேவனை விட்டு பிரிக்கப்பட்டதாலே நாம் தேவனால் நித்தியமாக இணைக்கப்பட்டுள்ளோம்.[9]

நமது பழைய மனிதன் அவரில் மரித்ததினாலே புதிய மனிதன் நமக்குள்ளே ஜீவன் பெற்றுள்ளான்.[10]

---

1 ஏசாயா 53:4-5,
2 ஏசாயா 53:4-5,
3 ஏசாயா 53:10, 2 கொரிந்தியர் 5:21,
4 எபிரெயர் 2:9,
5 கலாத்தியர் 3:13-14,
6 2 கொரிந்தியர் 8:9, 9:8
7 மத்தேயு 27:35-36, எபிரெயர் 12:2, 2:9
8 மத்தேயு 27:46 51, எபேசியர் 1:5 6
9 ஏசாயா 53:8, 1 கொரிந்தியர் 6:17
10 ரோமர் 6:6, கொலோ. 3:9-10

ஆசிரியரைப்பற்றி.......

டெரிக் பிரின்ஸ் இந்தியாவில் பெங்களூர் பட்டணத்தில் பிரிட்டிஷ் தம்பதியருக்குப் பிறந்தார். பிரிட்டனிலுள்ள பிரசித்தி பெற்ற கல்வி நிறுவனங்களான ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்து கிரேக்கம் மற்றும் இலத்தீன் மொழிகளில் புலமை பெற்றார். **1940** முதல் **1949** வரை கேம்பிரிட்ஜ்ஜில் உள்ள கிங்ஸ் கல்லூரியில் புராதன மற்றும் நவீன தத்துவம் என்ற துறையில் பேராசியராக இருந்தார். அராமியம் மற்றும் எபிரெய மொழியை கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் எருசலேமிலுள்ள எபிரெய பல்கலைக் கழகத்திலும் கற்றார். மேலும் இவர் உலகத்திலுள்ள பல நவீன மொழிகளைப் பேசும் ஆற்றல் உள்ளவர்.

இரண்டாம் உலகப் போரின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் இராணுவத்தில் மருத்துவமனை ஊழியராகப் பணி புரிந்தபோது தன் வாழ்க்கையை மாற்றிய இயேசுவை நேருக்கு நேர் சந்திக்கும் அனுபவத்தைப் பெற்றார். அதைக் குறித்து அவர் பின்வருமாறு கூறுகிறார்:

இந்தச் சந்திப்பினால் என்னால் மாற்றமுடியாத இரண்டு முடிவுகளை மேற்கொண்டேன்: முதலாவது இயேசு ஜீவிக்கிறார். இரண்டாவது வேதாகமம் உண்மையான,

பொருத்தமுள்ள இன்றைய நாளுக்கும் ஏற்ற புத்தகமாகும். இந்த இரண்டு முடிவுகளும் என் வாழ்க்கையில் நிரந்தரமான மாற்றத்தை ஏற்படுத்தியது.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் பிரிட்டிஷ் இராணுவம் இவரை எங்கு பணியில் வைத்திருந்ததோ அங்கேயே தொடர்ந்து தங்கியிருந்தார். அந்த இடம் எருசலேம் பட்டணமாகும். லிடியா என்பவரை மணந்ததன் மூலம் லிடியாவின் குழந்தைகள் இல்லத்தில் வாழ்ந்த எட்டு பிள்ளைகளுக்கு இவர் வளர்ப்புத் தந்தையானார். இவர்கள் குடும்பமாக **1948**ல் இஸ்ரவேல் நாடு உருவாவதைக் கண்டு களித்தனர். கென்யாவில் கல்வியாளராகப் பணிபுரிந்தபோது லிடியாவும் பிரின்ஸீம் ஆப்பிரிக்கப் பெண்குழந்தை ஒன்றை ஒன்பதாவது குழந்தையாகத் தத்தெடுத்தனர். **1975**ல் லிடியாவின் மரணத்திற்குப் பின் **1978**ல் பிரின்ஸ் மறுமணம் செய்தார். இவரது லிடியாவைப் போல் ரூத்தையும் அவர்கள் எருசலேம் பட்டணத்தில் ஆண்டவருடைய ஊழியம் செய்து கொண்டிருந்த போது சந்தித்தார். ரூத்தின் பிள்ளைகள் மூவருடன் அவர்களுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள் பன்னிரண்டு பேராயினர். மேலும், அவர்களுக்கு அநேகப் பேரப்பிள்ளைகளும், அவர்களுடைய பிள்ளைகளுமாக அவர்கள் குடும்பம் பெரியதானது.

இவரது சபைப் பாகுபாடற்ற நிலையினால் பலதரப்பட்ட இன, மத மக்கள் மத்தியிலும் இவர் பிரசங்கிக்க வழிவாசல் திறக்கப்பட்டது. நமது காலத்தில் சர்வதேச அளவில் சிறந்த வேத விற்பன்னராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார். இன்றைக்கு டெரிக் பிரின்ஸீடன் (**Today with Derek**

Prince) என்ற தினந்தோறும் ஒலிபரப்பப்படும் வானொலி நிகழ்ச்சி உலகத்தின் பாதிக்கு மேல் உள்ள மக்கள் அரபி, ஐந்து சீன மொழிகள் (மண்டாரின், அமாய், கேன்டோனிஸ், ஷாங்கையீஸ், ஸ்வேடோ,) மங்கோலியன், ஸ்பேனிஷ், ரஷ்யன்,டோங்கன் ஆகிய மொழிகளில் கேட்கின்றனர். இவர் 30 புத்தகங்களுக்கு மேல் எழுதியுள்ளார். அவைகள் ஐம்பதுக்கு மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

'உலகளாவிய தலைவர்களின் அமைப்பு' (Global Outreach Leaders Programme) என்ற டெரிக் பிரின்ஸ் ஊழியங்களின் மூலமாக இவரது புத்தகங்களும் ஒலி நாடாக்களும் மூன்றாவது உலக நாடுகள் கிழக்கு ஐரோப்பா, ரஷ்யா ஆகிய நாடுகளிலுள்ள கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவசமாக அனுப்பிவைக்கப்படுகின்றன. 2003ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் எருசலேம் பட்டணத்தில் வைத்து கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

டெரிக் பிரின்ஸ் ஊழியங்களின் தலைமையிடம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வட கரோலினா மாகாணத்திலுள்ள சார்லட் பட்டணத்தில் அமைந்துள்ளது. இதன் கிளை அலுவலகங்கள் ஆஸ்திரேலியா, கனடா, ஜெர்மனி, ஹாலந்து, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, தென்னிந்தியா மற்றும் பிரிட்டனில் அமைந்துள்ளன.

எங்களுடைய மற்ற வெளியீடுகள்

ஆசீர்வாதங்கள் அல்லது சாபங்கள்: நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்

ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம்பண்ணப்படுதல்

தெய்வீகப்பரிமாற்றம்

பிசாசுகளை துரத்துதல்

அளவற்ற பேரன்பு

வாழ்வளிக்கும் விசுவாசம்

வாழ்விற்கு அடித்தளங்கள்

தேவனின் மருந்து புட்டி

உங்கள் பணத்தைக் குறித்த தேவனுடைய திட்டம்

விட்டுக்கொடுத்தலின் கிருபை

உங்களில் உள்ள தூய ஆவியானவர்

சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு கடந்து வருவது எப்படி?

தேவனின் சிறப்பு ஈவினை நீங்கள் விரும்பினால்

வாழ்வின் கசப்பான ஊற்று

லூசிஃபரின் சுயரூபம்

அறிக்கையிடுதலின் ஆற்றல்

ஆவிக்குரிய போராட்டம்

சோதிக்கப்படுதல்

அவர்கள் பிசாசுகளை துரத்துவார்கள்

அனாதைகள், விதவைகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், இவர்களிடம் அக்கறை கொள்பவர் யார்?

பரிசுத்த ஆவியானவர் என்பவர் யார்?

Derek Prince Ministries - India

எங்களது இணையதள்த்தில் உங்களுக்காக சிறப்பு சலுகைகள் மற்றும் வெளியீடுகள் காத்திருக்கின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இணையதள முகவரிக்கு சென்று பாருங்கள்.

www.derekprince.in

.:பேஸ்புக்கில் எங்களது முகவரி:
Derek Prince Ministries - India

உங்கள் ஜெப தேவைகளுக்கும், ஊழியத்தை தாங்கும் உதாரத்துவ காணிக்கைகளை அனுப்பவும், மேலும் புத்தகங்களை வாங்கவும், கீழ்காணும் முகவரியில் எங்களுடன் தொடர்புக் கொள்ளுங்கள்:

DEREK PRINCE MINISTRIES - INDIA

C/o DPM IMPEX

1-C, EVR Road, Puthur

Trichy - 620 017, Tamil Nadu, India.

E-Mail: admin@derekprince.in

Phone: 00-91-98430 55414, 95855 38201.